492

EDITOR

The Trained Teacher

A HIGH-CLASS TAMIL MONTHLY FOR TEACHERS

VOL. 16 MAY 1921 No. 5



CONTENTS

1. AVVAYAR	... *Editor*	97
2. TODAS IN N[illegible] ...	... ,,	100
3. THE DUTIES OF ELEMENTARY SCHOOL TEACHERS	*S. Krishnan*	105
4. CORRELATION METHOD	*P. Parimanap-pallavaroyar*	109
5. CONVERSATION ...	*Janavinodhini*	112
6. PALLU ON TIRUNARAIYUR	*K. S. Gopalachariar*	119

AUG 1921

EDITOR—C. R. NAMASIVAYA MUDALIAR.

Madras:

C. COOMARASAWMY NAIDU & SONS



நல்லாசிரியன்

(1921ஞு மே 25உ வெளியானது)

பொருளடக்கம்

1.	அவ்வையார்	பத்திராதிபர்	97
2.	நீலகிரி தொதவர்கள்	,,	100
3.	பிரதம ஆசிரியரின் கடமைகள் ...	எஸ். கிருஷ்ணன்	105
4.	பாடங்களைச் சம்பந்தப்படு திப் போதித்தல்	P. பரிமணப் பல்லவராயர்	109
5.	சம்பாஷணை	ஜனவிநோதினி	112
6.	திருநறையூர்ப் பள்ளுக்கும்மி	K. S கோபாலாசாரியார்	119

பத்திராதிபர் - கா. நமச்சிவாய முதலியார்

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

வெளியிடுவோர்

வருடச் சந்தா ஒன்றரை ரூபா] [தனிப் பிரதி 3 அணா

OFFICE 4- AUG 1921

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 16 | 1921௵ மே௴ | மாதம் 5

AVVAYAR

அவ்வையார்

பந்தன் அந்தாதி என்னும் ஒருநூலும் அவ்வையார் இயற்றியதாக வழங்குகின்றது. அதைப்பற்றிய கதை ஒன்றும் உண்டு. அதாவது :

சோழவள நாட்டில் முன்நாளில் சிறப்புற்று விளங்கிய காவிரிப்பூம் பட்டினம் என்னும் நகரத்தில் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் திரண்ட செல்வமுடையவன் ; பந்தன் என்னும் பெயரினன். அப்பந்தன் தூரதேசங்களிற் சென்று வாணிபம் புரியும் நோக்கமுடையனாய் சரக்குகளை ஏற்றிக்கொண்டு மரக்கலம் ஊர்ந்து நடுக்கடலில் செல்வானானான். அப்போது அவனது

அருங்குணத்தையும் அழகையும் உணர்ந்த ஆதிசேஷன், பாதாள-லோகத்தினின்றும் மேலே வந்து, பந்தனைக்கண்டு, அவனைத் தூக்கிக்கொண்டு நாகலோகத்திற்குச் சென்று தன் புத்திரியை அவனுக்கு மணம்புரிவித்தான். பந்தன் அந்த நாககன்னிகையை மணந்து சிலநாள் அங்கேயே தங்கியிருந்து அவளோடு இன்புற்று வாழ்ந்திருந்தான்.

இவ்வாறு நாள்பல செல்ல, பந்தன் தன் நாட்டிற்கு ஏக விடையளிக்குமாறு ஆதிசேஷனை வேண்ட, ஆதிசேஷனும் அவனுக்கு விடையளித்து, விலையுயர்ந்த நாகரத்தினங்களையும், அரிய ஆபரணங்களையும், ஒரு பீதாம்பரத்தையும், அரியதோர் கருநெல்லிக்கனியையும் பரிசாகக் கொடுத்து, 'மருமானே! இந்த இரத்தினங்களையும் ஆபரணங்களையும் கொண்டு பூவுலகில் குபேரனைப்போல் வாழ்வாயாக. இந்தப் பொன்னுடையைப் போர்த்துக் கொள்வோர் என்றும் இளமை மாறாதிருப்பர். இந்நெல்லிக்-கனியை உண்பவர் நெடுங்காலம் உயிருடன் வாழ்வர். ஆதலின் இவற்றைப்பெற்று நீ அரோக திடகாத்திரனாய் நீடுவாழ்க' என்று வாழ்த்தி அனுப்பினான்.

பெறுதற்கரிய பொருள்களைப் பெற்ற பந்தன் பேருவகை-யுற்று, ஆதிசேடனை வணங்கி, அரிதிற் பிரிந்து காவிரிப்பூம் பட்-டினத்தை அடைந்தான். அடைந்தவன், அக்காலத்தே அந்-நாட்டை ஆண்டுகொண்டிருந்த அரசற்குத் தான்பெற்ற நெல்லிக்-கனியில் ஒருபாதியை காணிக்கையாகச் செலுத்தி அரசனறிய இனிது வாழ்ந்திருந்தனன். அதனை அறிந்த ஔவையார் அவன் மீது பந்தனந்தாதி என்னும் ஒரு பிரபந்தத்தை இயற்ற, அவன் அகமிக மகிழ்ந்து, அதற்குப் பரிசாகத் தன்னிடமிருந்த மற்றொருபாதி நெல்லிக்கனியையும் பொன்னுடையையும் ஔவை-யாருக்குக் கொடுத்தனன். ஔவையார் அவற்றைப்பெற்று மகிழ்ந்து நெடுங்காலம் இளமைமாறாது இவ்வுலகில் வாழ்ந்திருந்-தனர் என்பதாம்.

பந்தனந்தாதி என்னும் நூல் இப்போது அச்சிடப்பட்டு வழங்கிவருகின்றது. அந்நூலின் செய்யுள் நடையை நோக்கினால் அஃது ஔவையார் வாக்குப்போல் காணப்படவில்லை. அன்றியும் வெகு சமீபகாலத்தில் தமிழில் வழக்காறு பெற்ற துரை முதலிய சொற்களும் அந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

அசதிக்கோவை என்னும் ஓர் அரிய நூலும் அவ்வையார் செய்ததாக வழங்குகின்றது. அதற்கும் ஒரு கதை உண்டு. அது வருமாறு:

ஒரு நாள் அவ்வையார் ஒரு காட்டின் வழியே போய்க்கொண்டிருக்கையில் கடும்பசியால் களைப்படைந்தனர். இனி ஓர் அடி எடுத்துவைக்கவும் வலியற்றிருக்கும் நிலைமையில் ஓர் ஆட்டிடையன் எதிர்ப்பட்டான். அவன் தன் கையில் கஞ்சிக் குடுவை வைத்திருப்பதைப் பார்த்து, 'அப்பா, பசி காதை அடைக்கிறது, ஒரு கை கஞ்சி வார்த்தால் உண்டு களை தீர்வேன்' என்றனர். இடையன் மனமிரங்கித் தன்னிடமிருந்த கஞ்சியில் பாதியை அன்புடன் வார்த்தான். அவ்வையார் அதை உண்டு பசி தீர்ந்து, அவனுடைய அருங் குணத்தை வியந்து, 'என்னே இவன் கல்வியறிவில்லாதவனாக இருந்தும், ஏற்றோர்க்கு இல்லையென்னாத இனிய குணம் படைத்திருக்கின்றான். இவன் பெயர் இவ்வுலகில் என்றும் நிலவுமாறு ஏதேனும் செய்யவேண்டும்' என்று நினைத்து, அவனை அன்புடன் பார்த்து, 'அப்பா, உன் பேர் என்ன?' என்று கேட்டனர். அவன் தன் பெயரையும் மறந்துவிட்ட பேதை, ஆதலால், சிறிதுநேரம் திகைத்து, 'அம்மா, அசதி*' என்றான். அது கேட்ட அவ்வையார், 'என்னே, இவ்வுலகில் பேரை மறந்த பித்தரும் உண்டோ?' என்று வியந்து, 'பேர் தெரியாவிட்டால் போகட்டும்; உன் ஊர்பேர் என்ன?' என்று கேட்டனர். அவன் அதையும் அறியானாய், 'எங்கள் ஊரில் ஐந்து வேல மரம் உண்டு' என்றான். அதன்மேல் அவ்வையார் அந்த இரண்டையும் சேர்த்து 'ஐவேல் அசதி' என்னும் பெயராக்கி, அவன்மேல் கோவையென்னும் ஓர் அரிய பிரபந்தம் இயற்றினர். அதற்கு அசதிக்கோவை என்று பெயர். அந்த நூல் முற்றும் கிடைக்கவில்லை; சில செய்யுட்கள் மட்டும் வழங்குகின்றன. அதனால் அதைப் பற்றி எதும் கூறுதற்கில்லை. பாட்டுக்கள் செப்பமாக இருக்கின்றன.

ஞானக்குறள் என்பது அவ்வையார் செய்ததாக வழங்கும் மற்றொரு சிறந்த நூல். அதைச் செய்ததற்கும் ஒரு காரணங் கூறுகின்றனர். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் அரிய நூலை அவ்வையார் கண்டபோது, 'அஃது என்ன நூல்?' என்று கேட்க, வள்ளுவர் '1330 குறள் வெண்பாக்களால், அறம் பொருள்

* அசதி = மறதி.

இன்பம் என்னும் மூன்று விஷயங்களைப்பற்றிச் செய்திருக்கின்றேன்' என்று கூறினாராம். அதன்மேல் அவ்வையார், 'இவ்வளவு பெரியதோர் நூல் செய்தும் முடிவில் ஞானத்தைப்பற்றி ஏதும் சொன்னதாகக் காணோமே, அதை நான் செய்து முடிக்கின்றேன்' என்று கூறி, இந்த ஞானக்குறளை அவ்வையார் இயற்றினர் என்ப. இந்த அரியநூலும் சங்கநூற்றொகைகளில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருத்தலின் சந்தேகித்தற்கு இடமுண்டாகின்றது.

பத்திராதிபர்.

TODAS IN NILGIRIS

நீலகிரித் தோதவர்கள்

இந்துதேச சரித்திரத்தில் 'இந்தியாவின் பூர்வ குடிகள்' என்னும் தலைப்பில் வாசிக்கும்போது நீலகிரியில் உள்ள தோடர்கள் என்னும் ஒரு வகுப்பினர் பெயரைக் கேட்டிருக்கிறோம். அவர்களைப் பற்றிப் பேரளவாகக் கேட்டிருக்கிறோமேயன்றி, மற்றொன்றும் நமக்குத் தெரியாது. இந்தியாவின் பூர்வ குடிகள் என்று சிறப்புவாய்ந்த இந்த வகுப்பினர் நமக்கு அதிக சமீபத்தில் இருந்தும் அவர்களைப்பற்றி நாம் ஏதும் அறியாதிருப்பது வியப்பினும் வியப்பன்றோ?

அவர்கள் பெயராவது நமக்குச் சரியாகத் தெரியுமா? அவர்கள் வசிக்கும் இடத்தின் பெயரையாவது சரிவரத் தெரிந்து கொண்டோமா? ஆராய்ச்சி என்பது ஒரு சிறிதும் இல்லாத நமக்கு எதுதான் சரியாகத் தெரியும்! அந்தோ, அவலம்!

தோதவர் என்னும் பெயரை ஐரோப்பியர் தோடர் என்றனர். அதை நாமும் அப்படியே சொல்லத் தொடங்கிவிட்டோம். நமது நாட்டுப் பெயர்களில் இவ்வாறு சிதைந்து நாசமானவை சிலவோ? மிகப் பல. சென்னைக்கு மெட்ராஸ் (Madras) என்றும், சதுரங்க பட்டணத்திற்கு ஸட்ராஸ் (Sadras) என்றும் பெயர்கள் எப்படி ஏற்பட்டனவோ இன்னும் தெரியவில்லையே. தரங்கம்பாடிக்கும் ட்ராங்கொபா(Trancobar)ருக்கும் என்ன சம்பந்தமோ? திருவை

யாறு என்பது திருவாதி (Tiruvadi) என்று எப்படி மாறிற்றோ? யாம் அறியோம். இவ்வாறெல்லாம் பாஷை சிதைந்து போனால் பிற்காலத்தே இவற்றின் உண்மைநிலை எவ்வாறு விளங்குவது? தமிழ் மக்களே, இவ்வகையான சிதைவு மொழிகளை செப்பஞ் செய்ய முயலுங்கள்.

பி. ஏ. வகுப்பில் சரித்திரத்தில் தேர்ச்சியடைந்து பட்டம் பெற்ற ஒருவரோடு யாம் பேசிக்கொண் டிருக்கையில் இடையில் சொல்ல நேர்ந்த தோதவர் என்னும் சொல்லைக் கேட்டு மயங்கி, அவர் 'அதென்ன வார்த்தை?' என்று கேட்டனர். அதனை யாம் விவரித்துரைத்த பின்னர் அவர், 'அந்தோ, நம் நாட்டுச் சொற்கள் இவ்வாறு சிதைந்துபோகின்றனவே! இவற்றைச் சீர்திருத்த ஏதும் வழியில்லையா?' என்று கூறிப் பெரிதும் ஏக்கங் கொண்டனர். அதனால் அங்கிலத்தில்வரும் நம் நாட்டுச் சொற்கள் முதலியவற்றை விளங்க உணர்ந்து, அவற்றின் சரியான ரூபத்தை அறிந்துகொள்வது அவசியம் என்பதை யாம் இங்கு வற்புறுத்துகின்றோம்.

நீலகிரி என்பது காரணப் பெயர். மலையும், மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சிநிலம் என்று பெயர் பெறும். குறிஞ்சி என்பது ஒரு வகைச் செடி. அது பெரும்பாலும் மலை நாட்டில் விருத்தியாவது. அதுகொண்டே மலைநாட்டிற்குக் குறிஞ்சி நிலம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இவ்வாறே மற்றை மூன்று நிலங்களுக்கும் பெயர்கள் வழங்குதல் காண்க.

குறிப்பு: பண்டைக் காலத்தே தமிழ் மக்கள் பூமிக்கு நானிலம் என்று பெயரிட்டனர்; பூமி நான்கு பிரிவான நிலத்தை யுடையது என்பது பொருள். அவையாவன:—

1. குறிஞ்சி — மலையும், மலையைச் சார்ந்த இடமும்.
2. முல்லை — காடும், காட்டைச் சார்ந்த இடமும்.
3. மருதம் — வயலும், வயலைச் சார்ந்த இடமும்.
4. நெய்தல் — கடலும், கடலைச் சார்ந்த இடமும்.

இந்தப் பெயர்கள் அந்தந்த நிலத்தில் சிறந்து காணும் செடிகளைப் பற்றியே வந்தனவாம்.

குறிஞ்சிமலர் நீல நிறமுடையது. அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் இயல்புடையது என்ப. அம் மலர் பூத்திருக்கும்போது நீலகிரி நீல நிறமாகக் காணப்படுதல் பற்றி

இம் மலைக்கு நீலமலை அல்லது நீலகிரி எனப் பெயர் அமைந்தது என்று கூறுகின்றனர். இம் மலையின் பெயர் சிலப்பதிகாரம் முதலிய பண்டை இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இதனால் நீலமலை என்பதே இதன் பெயர் என்பதும் இது தமிழ்நாட்டு வழக்குப்பற்றி இதற்கு ஏற்பட்டது என்பதும் நன்கு விளக்குகின்றது.

நீலகிரி கடல் மட்டத்திற்குச் சுமார் 7,500 அடி உயர முள்ளது. இதன் உயரிய முடிக்குத் தொட்டபெட்டா என்று பெயர். இதன் உயரம் சுமார் 9,000 அடி யுள்ளது. நீலகிரியில் ஒத்தகமந்து என்பது 7,250 அடி உயரத்தில் அமைந்துள்ள நகரம். இந்தப் பெயரை ஐரோப்பியர் உதகமண்ட் என்று சொல்லிவிட்டனர். பின்பு நம்மவர் அதை முற்றும் சம்ஸ்கிருதப் பெயராக்கி உதக மண்டலம் என்று முன் பின் யோசியாமற் கூறத் தலைப்பட்டுவிட்டனர். இதற்கு ஜலம் நிரம்பிய பிரதேசம் என்றும் வியாக்கியானம் சொல்லத் துணிந்துவிட்டனர். நம்மவர் ஆராய்ச்சி இவ்வாறு விருத்தி யடைகின்றது! இதை நோக்கும்போது நம் நாட்டுத் தமிழ்ச் சொற்கள் எவ்வெவ்வகையில் தலை தடுமாறின என்பதை எவர் எவ்வாறு அறிந்து கூறுதல் கூடும்?

இது நிற்க, ஒத்தகமந்து என்பது யாது? தொதவர் என்னும் வகுப்பினர் வசிக்கும் ஊருக்கு மந்து என்பது பெயர். மந்து என்பது மன்று என்னும் தமிழ்ச் சொல்லின் மாறுபாடு என்பர். மந்து என்னும் இப் பொதுப்பெயர் சிறப்புப்பெயரோடு சேர்ந்து வெவ்வேறு ஊருக்குப் பெயராய் வழங்கும். அவற்றில் சில வருமாறு: ஒத்தகல்மந்து, பஞ்சக்கல்மந்து, கன்னகிமந்து முதலியனவாம். இத்தகைய மந்துகள் நீலகிரியில் அநேகம் உண்டு. தொதவர் என்னும் இவ்வகுப்பினர் நீலகிரியில் மட்டும் வசிக்கின்றனர். இவர்கள் இந்த மலையில் சுமார் 6000 அடிக்குக் கீழுள்ள இடங்களில் வசிப்பதாகக் காணோம். இவர்கள் மிகவும் குளிர்ச்சியான இடங்களில்தான் வசிக்கின்றனர். நீலகிரியில் ஒத்தக மந்து முதலிய குளிர் நாட்டில் வசிக்கும் தொதவர்கள் நல்ல மழை பெய்யாமல் கொஞ்சம் உஷ்ணம் அதிகப்பட்ட காலத்தில் இடம் விட்டுப் பெயர்ந்து சென்று மிகவும் குளிர்ச்சியான இடத்தில் வசித்துக்கொண்டிருந்து, மழை பெய்தவுடன் தம் இடத்திற்கு வந்து சேர்கின்றனர். அதனால் இவர்களுக்கு மிகவும் குளிர்ச்சியான இடமே ஏற்றதென்று புலப்படுகின்றது.

குறிப்பு: ஒத்தக மந்து என்பது சரியான பெயர். ரெயில்வே ஸ்டேஷனிலும் ஒத்தகமந்து என்றே எழுதியிருக்கிறது. அங்கே வசிப்பவர்கள் ஒத்தை என்று வழங்குகின்றனர். இதையே அங்கிலேயர் ஊட்டி என்கின்றனர்.

ஒரு மந்தில் நாலைந்து வீடுகளே இருக்கும். அந்த வீடு சுமார் 20 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ளது. அதன் உருவம் மாட்டு வண்டிக்குக் கட்டும் கூண்டைப்போல் இருக்கும். தொதவர் தம் வீட்டை மூங்கிலினாற் கட்டி ஒருவகைப் புல்லைக்

கூரையாக வேய்கின்றனர். வீட்டில் முன்புறத்திலும் பின்புறத்திலும் மரப்பலகைகள் அடித்து, சந்து தெரியாமல் மண்ணைப்பூசி சாணியால் மெழுகி விடுகின்றனர். உள்ளே நுழைவதற்குச் சுமார் 2 அடி உயரமும் $1\frac{1}{2}$ அடி அகலமுமுள்ள ஒரு கதவு அமைத்து ஒரு செருகு பலகையால் அதை மூடுகின்றனர். அவர்கள் அதற்குள் நுழையும்போது இரண்டு கைகளையும் தரையில்ஊன்றி, முழங்காற்படியிட்டு, ஒரு குழந்தை தவழ்வதுபோல், தவழ்ந்து செல்கின்றனர். வீட்டுச்குள் நீளவாட்டத்தில் சுமார் 8 அடி நீளமும் 4 அடி அகலமும் $1\frac{1}{2}$ அடி உயரமும் உள்ள ஒரு திண்ணை உண்டு. தானியங்களை வைத்துக்கொள்ளவும் சமையற் பாத்திரங்களை வைத்துக் கொள்ளவும் வேண்டிய இடம் அமைத்துக் கொள்ளுவார்கள். அவர்கள் சாதாரணமாய் அந்தத் திண்ணை-

யின்மேலே படுத்துக்கொள்ளுவர். ஒரு வீட்டில் நாலைந்துபேரே இருப்பாராதலின் அந்த இடம் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும்.

தோதவர் கள்ளங்கபடற்ற மனமும் எளிய வாழ்க்கையும் உடையவர்கள். அவர்கள் செல்வமெல்லாம் எருமைகளே. ஒருவனுக்குள்ள எருமைகளைக் கொண்டே அவனுக்குள்ள செல்வத்தை மதிப்பிடுவது அவர்களுக்குள் வழக்கம். இதைவிளக்க ஓர் உதாரணம் உண்டு. அதாவது :

நமது சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் மன்னர் இளவரசராயிருந்த காலத்தில் இங்கே வந்தாரன்றோ? அக்காலத்தில் அவர் வருகையை விவரித்து, ஒரு பாதிரியார், தோதவர்களைக் கூட்டி ஓர் உபந்நியாசம் செய்தார். அப்போது, 'அவர், 'நமது ராஜா வருகிறார்; அவர் நமக்கெல்லாம் அரசர்; சிறந்த செல்வமுள்ளவர்; இந்தத் தேசமெல்லாம் அவருடையது. நாம் அவருக்குக் குடிகள். அவர் அநேக பிரபுக்களோடும் பரிவாரங்களோடும் இங்கே வருகிறார். அவர் வருகையை நாமெல்லாம் கொண்டாட வேண்டும்' என்று கூறினார். அப்போது தோதவர்களில் ஒரு கிழவன் பாதிரியைப் பார்த்து, 'ராஜா பெரிய பணக்காரர் என்று சொல்லுகிறீர்களே, அவருக்கு எத்தனை எருமைகள் இருக்கின்றன? எத்தனை எருமைகள் கொண்டுவருகிறார்? சொலலும்' என்று கேட்டானாம். பாதிரியார் என்ன பதில் சொல்லுவார்! சிரித்துவிட்டு சிறிதுநேரம் சும்மா இருந்தாராம். அதன்மேல் கிழவன், 'எருமை இல்லாத செல்வம் என்ன செல்வம்' என்று இழிவாக எண்ணினானாம். (தொடரும்)

பத்திராதிபர்.

THE DUTIES OF ELEMENTARY SCHOOL TEACHERS

பிரதம ஆசிரியரின் கடமைகள்

(முன்தொடர்ச்சி பக்கம் - 87)

VII. (1) பாடம் போதிக்கையில் அனுசரிக்க வேண்டிய விதிகள் : பாடம் போதிக்கையில் அதே கவனமாய் போதிக்க வேண்டும். 'நல்லாசிரியன்' வயது 13, நான்காம் சஞ்சிகையில், 'ஒன்றே செய்க ஒரொரு காலில்' என்னும் தலைப்புடன் ஷெ பத்திராதிபர் அவர்கள் இயற்றிப் பிரசுரித்திருக்கும் அருமைச் செய்யுள் மாலையின் கருத்தை மறந்துவிடக் கூடாது. யாதாயினும் ஒரு தேக முயற்சி அல்லது மனோமுயற்சியில் இருந்து கொண்டு, பாடத்தையும் போதிக்க முயன்றால் அப்பாடம் செவ்வனே நடைபெறாது. ஏதேனும் ஆழ்ந்த யோசனையி லிருக்கும்போது, எதிரில் நடக்கும் காரியங்களையும் அறியக்கூடாதபடி புலன்கள் ஒடுங்கி நிற்கின்றன. ஆதலால் ஒரேகாலத்தில் அநேக வேலைகளைச் செய்து முடித்தல் சாத்தியமல்ல. பிள்ளைகள் சிலேட்டுக் கணக்குகள் செய்யும் சமயம், சொல்வதெழுதல் எழுதித் திருத்தும் சமயம், சட்டம் எழுதும் சமயங்களில் கூட வேறு வேலையில் அமர்தல் தவறாகும். இப்பாடங்களிலும் உபாத்தியாயரின் மேற்பார்வை அடிக்கடி இருந்துகொண் டிருக்கவேண்டும். மேலும், நாம் கருத்துடன் ஒரு வேலையைச் செய்துகொண் டிருக்கும்போது ஸ்நானம் செய்தல், உண்ணல், முதலான நித்திய கடமைகளைச் செய்யக்கூடப் பிந்தி விடுகிறோம். அச்சமயம் யாராவது ஒருவர், நம்மை ஒரு காரியத்துக்குக் கூப்பிட்டால் 'இதோ வருகிறேன், இதோ வருகிறேன்' என்று தாமதம் செய்கிறோம். வேலை செய்கையில் அதை அரைகுறையாக விட்டுப் போக மனம் வருகிறதில்லை. இது மனித சுபாவம். அவ்வாறே வேறு வேலையில் அமர்ந்துகொண்டு பாடம் கற்பிக்கும் உபாத்தியாயரும் பிள்ளைகள் கணக்குச் செய்து கீழே போட்டவுடனே பார்த்துத் திருத்தி மறுகணக்குப் போடாமல் தாமதம் செய்வார். ஒரு பீரியடில் 4 கணக்குகள் போடக்கூடியதாயிருந்தால் 1 அல்லது

2 தான் போடச் சாத்தியமாகும். இவ்வாறே பிள்ளைகள் சொல்வதெழுதலில் ஏற்பட்ட பிழைகளைத் திருத்திவிட்டும், சட்டம், சித்திரம் எழுதிவிட்டும் ஒருவரோடொருவர் பேசி வீண்பொழுது போக்கிக்கொண்டிருப்பார்கள். உபாத்தியாயர் ஒருவாறு தன் வேலையைச் சுருக்கிக்கொண்டு பிள்ளைகளைக் கவனிக்க மனம் திரும்புவார். ஒருவருக்காகவும் காலம் காத்துக்கொண்டிராது இதற்குள்ளாக அதிக நேரம் சென்று விடும். ஆரம்பித்த பாடம் சரியாகக் கற்பிக்கப்பட மாட்டாது. சில சமயங்களில் அடுத்த பீரியட் பாடமும் நடத்த சாத்தியமில்லாமல் போய்விடும். அடுத்த பீரியடில் வேறு வகுப்புக்குப் பாடம் கற்பிக்கப் போகும் உபாத்தியாயராக இருந்தாலோ, பீரியட்மணி யடித்தவுடன் பிள்ளைகள் செய்த வேலையைக்கூடச் சரியாகக் கவனியாமல் வகுப்பை விட்டு நீங்கி விடுவார். இவ்வழக்கத்தால் பிள்ளைகளின் படிப்புத் தேர்ச்சி குறைவுறும். உபாத்தியாயர் சொன்ன வேலையை 'உடனே செய்யவேண்டும், சரியாகச் செய்ய வேண்டும்' என்னும் எண்ணம் பிள்ளைகளின் மனத்தைவிட்டு நீங்கிவிடும். பிள்ளைகள் சோம்பேறிகளாய் விடுவார்கள். உபாத்தியாயர் சில அவசரமான சந்தர்ப்பங்களில் தவிர தாம் செய்யவேண்டிய எழுத்து வேலைகளை விடுமுறை காலங்களிலேயே செய்ய வேண்டும்.

(2) கிராமவாசிகளிற் கல்வித் தேர்ச்சியில்லாத சில பெரிய தனக்காரர், உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் பாடம் போதித்துக்கொண்டிருக்கையில், அவரைக் கூட்டிக்கொண்டு வரும்படி சில சமயங்களில் ஆள் அனுப்புவார்கள். அல்லது அவர்களே பள்ளிக்கூடத்துக்கு வந்து, தாங்கள் ஜோலியாகப் போகும் இடங்களுக்கு உபாத்தியாயரையும் பொழுது போக்காகத் துணைக்குக் கூட வரும்படி கேட்டுக் கொள்வார்கள். அப்போது அவர்கள் தயவு வேண்டுமென்று பாடம் போதித்தலை விட்டு அவர்கள் சொற்படி செய்வது தவறாகும். 'இப்போது பாடம் போதித்துக்கொண்டிருக்கிறேன், பள்ளிக்கூடம் கலைந்தவுடன் வருகிறேன்' என்று மரியாதையாகச் சொல்லிவிட்டு, தன் வேலையில் முயற்சியுள்ளவராக இருக்க வேண்டும். ஒரு தடவை போவாரானால் அடிக்கடி கூப்பிடத் தலைப்படுவார்கள். பிறகு போகாவிட்டால் மனஸ்தாபம் வரும். அப்படிப் போனால் பிள்ளைகளுக்குச் சரியாகப் பாடம் போதிக்க முடியாது. அவரது பெருமையும் குறை-

வுறும். திடீரென்று அதிகாரிகள் வரும் சமயத்திலும் துன்புறு-வார். மனச்சாட்சிக்கும் விரோதமாகிறது. ஆகையால் முதல் தடவையிலேயே போகாமல் மறுத்துவிடுவது நலம்.

(3) சிலர், பாடம் நடந்துகொண் டிருக்கையில், வகுப்பில் வந்து உட்கார்ந்து உபாத்தியாயரோடு பேச்சுக் கொடுப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் வகுப்பில் வந்து நுழைந்தவுடன் அவர்க-ளிடம் இரண்டொரு உபசார வார்த்தைகள் சொல்லிவிட்டு பாடத்தையே சிரத்தையாக மாணவர்க்குப் போதித்துக்கொண் டிருக்கவேண்டும். இவ்விதம் செய்தால் அவர்கள் கொஞ்சநேரம் இருந்து பார்த்துவிட்டு வகுப்பைவிட்டுத் தாங்களாகவே நீங்கி விடுவார்கள். இவ்வாறு செய்யாமல் 'வெறும் வாயை மெல்லும் பொக்கைவாய்க் கிழவிக்குக் கொஞ்சம் அவல் கிடைத்தாற்போல்' யாராவது வகுப்புக்கு வந்தவுடன் போதனையை நிறுத்திவிட்டு அவர்களோடு பேசி வீண்பொழுது போக்குதல் உசிதம் அல்ல.

(4) உபாத்தியாயர் தமக்குரிய இலட்சணங்கள் இன்னவை-யெனத் தெரிந்துகொண்டு அவற்றையெல்லாம் அடைய முயல வேண்டும். பாட சம்பந்தமாக அநேக புஸ்தகங்களையும் சஞ்சி-கைகளையும் ஓயாமற் படித்து, தமது விஷய ஞானத்தை விருத்தி செய்துகொள்ள வேண்டும். கற்பிக்கும் பாடங்களைப்பற்றி முன்-னமே யாராய்ந்து சிந்தித்துக்கொண்டு தகுந்த உபகரணங்களுடன் தெளிவாகப் போதிக்க வேண்டும். ஏராளமான விஷயஞானம் நிறைந்த களஞ்சியமாகிய இருதயத்தை யுடைய உபாத்தியாயரே பிள்ளைகளுக்குப் பாடங்கள் மனோஹரமா யிருக்கும்படி போதிக்க வல்லவராவார். பாடம் போதித்தலுக்கு வேண்டிய உபகரணங்க ளெல்லாம் பள்ளிக்கூடத்துக் காட்சி சாலையில் (School Museum) சேர்த்து வைக்கப்பட் டிருக்கவேண்டும். ''படித்தல் ஒரு கஷ்ட-மான வேலையல்ல, நாளுக்கு நாள் நூதனமான விஷயங்களை அறிந்து வருகிறோ மாதலால் இப்பள்ளிக்கூட வாழ்வு நமக்குச் சந்தோஷமாகவே யிருக்கிறது' என்று பிள்ளைகள் எண்ணும்படி சிரத்தையுடன் போதித்து வரவேண்டும். தெய்வபக்தி, தயை, சத்தியம், கள்ளாமை, பொறுமை, சாந்தம், வணக்கம், ஈகை முதலிய நற்குண நற்செய்கைகளைப் பிள்ளைகள் கைக்கொள்ளும்-படி சன்மார்க்கங்களையும் போதித்து வரவேண்டும்.

VIII. பிரதம ஆசிரியராகிய நமது கடமை மிகுந்திருக்கிறது. நாம் இவ்வாறெல்லாம் சிரத்தை யெடுத்துக் கொண்டு, யாதொரு கவலையும் மனத்திற் கொள்ளாமல், கள்ளங் கபடமற்ற பிள்ளைகளுடன் பழகி பாடங்களைச் செவ்வனே போதிக்கவேண்டியவர்களா யிருக்கிறோம். ஆனால்,

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே.

(தரித்திரன், கந்தரநுபூதி)

என்றபடி, நமக்குக் கிடைக்கும் குறைந்த சம்பளத்தின் காரணமாக, நமக்கு ஏற்பட்டிருக்கும் வறுமை மேற்கூறியவாறு சிரத்தையுடன் பாடுபடுவதற்கு இடையூறாக நிற்கிறது. இப்போதுதான் நம்மவர்கள் ஆங்காங்கே மஹாநாடுகள் கூட்டி பிரதம ஆசிரியரின் சம்பளத்தை உயர்த்தவேண்டு மென்று கவர்ன்மெண்டாரைக் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். நம்மில் ஒருவராகிய உத்தமசேரி போர்ட் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் பரிமணப் பல்லவராயர் அவர்கள் பிரதம ஆசிரியரின் சம்பளத்தை உயர்த்தவேண்டிய அவசியத்தைப்பற்றி அடிக்கடி பத்திரிகைகளின் வாயிலாக விவரமாக எடுத்துரைத்து வருகிறார். உயர்ந்த உத்தியோக பதவியில் இருப்பவர்களும் தேசாபிமானிகளாகிய மேதாவிகளும் நம்முடைய நிலைமையை நன்குணர்ந்து ராஜாங்க சபைகளில் நமக்காகச் சார்ந்து பேசி உதவிபுரிவார்களாயின் நமது காரியம் சித்தியடையும் என்பதில் ஐயமில்லை. நமது கடமையை நாம் சிரத்தையுடன் செய்வதற்கு அநுகூலமாக, கூடிய சீக்கிரத்தில் நமக்கு உயர்ந்த சம்பளம் கிடைக்கும்படி பரமகருணாநிதியாகிய ஆண்டவன் அருள்புரிவாராக.

S. KRISHNAN,
Assistant Teacher, Board Ely. School,
Karungalakudi.

CORRELATION METHOD

பாடங்களைச் சம்பந்தப்படுத்திப் போதித்தல்

(முன்தொடர்ச்சி பக்கம் - 94)

8. சித்திரம் முதலிய பல தராசு, கரும்பு.

9. கிண்டர்கார்ட்டன் தொழில்கள் — குச்சி வைத்தல், தராசு.

ஆக இவ்விதமாகவே நாம் நடத்தினால் எல்லாப் பாடங்களின் பொருள்களும் ஒரே கதை அல்லது பாடத்தின் சம்பந்தமாகவே வருதல் பிள்ளைகளுக்கு ஆச்சர்யமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும். ஆனால் ஒவ்வொரு பாடமும் ஆரம்பிக்கும்போது, சம்பந்தப்பட்ட பொருள், முதற்பாடமாகிய வாசகத்தின் சம்பந்தமென்பதை நாம் குழந்தைகட்கு உணர்த்திக்கொண்டே போவோமாயின், பிள்ளைகளுக்குண்டாகும் குதூகலம் குறைவற்றதென்பது எமது அனுபவமாகும்.

சம்பந்தப் படுத்தும் பாடங்களுக்கு ஆதாரமாயுள்ள பாடத்தை முதன் முதலில் நடத்தவேண்டியது அவசியம். மூலாதாரமான பாடம், ஒருநாளின் மத்தியிலிருக்குமாயின், அப்பாடத்திற்கும் முந்திய பாடங்கட்கும் சம்பந்தமில்லாது போகிறது. சம்பந்தப்படும்படியாகக் கிரமப்படுத்திக் கொண்டாலும், பிள்ளைகளுக்குச் சம்பந்தா சம்பந்தம் தெரியாது போய்விடும். அதனால் உற்சாகமில்லாதும் போய்விடும். பின்னால் வரும் பாடத்தின் சம்பந்தமென்றால், பின்னால் வருவதின் முழுதாத்பர்யமும் முன்னால் தெரிவதற்கில்லை. தெரியாமற் போமாயின், முன்கூறியதுபோல் உற்சாகமும், பாடத்தில் ஊக்கமும் கவனமும் இல்லாது போகும். சம்பந்தப்படுத்துவதிலும் அர்த்தமே யில்லை.

ஆகவே, மூலாதாரமான பாடம் முதலில் நடத்த வேண்டும். ஆதலால், சிலர் கதையை மூலாதாரமாகக் கொள்ளுகின்றனர். முதலில், அதாவது ஒரு தினத்தில், பாடங்கள் நடத்த ஆரம்பிக்கும் பொழுது பிள்ளைகட்கு, அவர்களின் புத்தி சுறு சுறுப்பா யிருக்கும் காலை நேரத்தில் முதல் மணியில் முக்கியமான தமிழ் (வாசக-

பாடம்), கணிதம் நடத்தவேண்டுமாதலால், கதையை நடத்துதல் உசிதமாயிராது.

ஆகையால், முதன் முதலில் வாசகபாடத்தையே நடத்துவது உசிதமாதலால், அதை மூலாதாரமாய்க்கொண்டு அதன் சம்பந்தமாகவே மற்றப் பாடங்களையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்துதல் உசிதத்தினும் உசிதமென்பதும் உணரக்கூடியது.

வாசக பாடத்துடனே மற்றப் பாடங்களையும் சம்பந்தப்படுத்திப் போதிக்கும்போது அப்பாடங்கள், வரிசைப்படுத்தியிருக்கும் பாடக்கிரமத்தின் வரிசைகிரமமாக ஒத்துவாரா தென்பதும், முன் பின்னாகவே போதிக்க நேருமாதலால், பாடக்கிரமத்தின்படி போதித்தற்கு முரணாக ஏற்படும் என்பதும் விளங்கும்.

ஆகவே, சம்பந்தப்படுத்திப் போதித்தலைப் பாடக்கிரமத்திற்கும், பாடக்கிரமத்தை சம்பந்தப்படுத்திப் போதித்தலுக்கும் இணங்க நடத்துவதும் இயலாத விஷயமென்பதும் உணரக்கூடியது. இவ்விருவகையில் 'மத்தளத்திற்கு இரு புறமும் இடி' என்பதைப் போல், ஆசிரியர்கள் பரீக்ஷாதிகாரிகளின் தனிப்பட்ட முறைகளால் அவர்களின் அதிகாரத்தில் இடிபடுவதும்—பட நேருவதும் ஆச்சரியமாகாது.

இக்குறிப்பு, உபாத்திமார் சங்கத்தில் வாசித்த இவ்வியாசத்தை நமது நல்லாசிரியனுக்கு அனுப்ப எழுதுங்கால் தனியாக எழுதிச் சேர்க்கப்பட்டதாகும்.

நாம் எவ்விதம் பிள்ளைகட்குக் குதூகலத்தை யுண்டாக்கிப் பாடங்களைப் போதிக்க வேண்டு மென்கிறோமோ என்று வற்புறுத்தப் படவும் செய்யப் படுகிறோமோ அவ்விதமே, நாம் நமது பிள்ளைகளிடமும் நமது வேலையிலும் குதூகலமா யிருக்கும்படி, நம்மைச் செய்ப வேண்டியது நமது மேலதிகாரிகளின் கடமை யல்லவா? மேலே கூறியவாறு (முறையை) அவர்கள் நம்மை வற்புறுத்தும்போது, அவர்களும் அம்மாதிரி நம்மை நடத்தும் விதத்தில் செய்து காட்டவேண்டாவோ? நமக்கு அவர்கள் ஆசிரியர்க ளல்லரா? ஆசிரியர் எவ்விதமோ அவ்விதமே யல்லவா மாணவரும்!

நாம் நமது சங்கங்களில், குறைந்து கொண்டு வரும் போதனை அறிவை, அபிவிருத்தி செய்து கொள்ளுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அவ்வபி விருத்திக்குக் காரணமாகிய மனம் சஞ்சலப்படாமல் செய்யவேண்டியது மல்லவா? அவ்விதம் சஞ்சலப்படாம லிருத்தற்கு அச் சஞ்சலத்திற்குக் காரணமாகிய, தற்கால நிலைமையின் கஷ்ட நிஷ்டூரங்களே யல்லவா? அக் கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றி நமது சங்கங்களில் நாம் ஒருவர்க்கொருவர் எடுத்துரைத்து, அவற்றை அகற்றிக் கொள்ள நமது சங்கத்துப் பிரசிடெண்டவர்கள் மூலமாயும் நமது நிர்வாகிகள் மூலமாயும் கடந்த 4, 5 மாதங்கட்கு முன்பெல்லாம் நாம் கேட்டுக்கொண்டு வந்ததனைத்தும் நண்பர்கட்கு நினைவிலிருக்கலாம். அதனால் அக்குறைகள் ஒருவாறு நிவர்த்தி செய்யப்படும் என்னும் நல்லெண்ணத்துடன் சஞ்சலத்தை அகற்றிக்கொண்டவர்களாய், ஒருவாறு மனச் சாந்தி அடைந்தவர்களாய், நமது வேலையில் கூடுமான வரையில் கவனஞ் செலுத்திவந்தோம். அப்போது அவைகளை நமது ஆசிரியர்களாம் பரீக்ஷாதிகாரிகளும் நிர்வாக அதிகாரிகளும் சிறிதும் ஆட்சேபித்தார்க ளில்லை. இப்போதோ, எடுத்துக்கொண்ட—'ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்துதல்' என்ற விஷயத்திற்கு முரணாய்—ஒரே பிடிவாதமாய்க் குறைகளைப் பற்றிப்பேசப்படா தென்கின்றனர். இவ் வகையில், 'ஒன்றுக்கொன்று சம்பந்தப் படுத்துதல்' எங்கே? ஒன்றுக்கொன்று வேறு பிரித்தல் தானே ஆகிறது! பேசப்படா தென்றால், அப்போது (தற்கால நிலைமையில்) நமது மனம் என்னவாகும்? சஞ்சலப்படாதோ? சஞ்சலப்படின் போதனையில் புத்தியெங்கு செல்லும்? சரியானபடி போதிக்கக் கவனமெங்கு செல்லும்? உற்சாகமெங்கே? ஊக்கமெங்கே?

கவர்னர், டைரக்டர் முதலியவர்களெல்லாம், குறைகளைத் தாராளமாய்ச் சொல்லவும் கூடிக் கலந்து பேசவும் சொல்லுவதில் அர்த்தமென்ன? அவர்களுடைய வாக்கின் செல்வாக்கு என்னவாகிறது? மதிப்பெங்கே?

சில வருடங்கட்கு முன்னே இந்த (லாலுகுடி) தற்போது ஸ்ரீரங்கம் ரேஞ்சில் பரீக்ஷாதிகாரியா யிருந்தவரும், தற்போது நெல்லூர் ஜில்லா பரீக்ஷாதிகாரியா யிருப்பவருமாகிய ஸ்ரீமான்

பார்த்தசாரதி நாயக்க ரவர்களால் ஏற்படுத்தப்பட்டு, தற்போது ரேஞ்சு பரீக்ஷாதிகாரியா யிருப்பவராகிய ஸ்ரீமான் ஜி. தாமோதர முதலியா ரவர்கள் தமது ஜார்ஜ் டவுன் ரேஞ்சின் எலிமெண்டரி உபாத்திமைச் சங்கத்தில், நல்லாசிரியன் பத்திராதிபராகிய ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியாரவர்களைக் கொண்டு, சென்ற பிப்ரவரி மாதம் 5-ந் தேதியில் 'தற்காலத்திய ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களின் நிலைமையைக் குறித்து உபந்நியசிக்கும்படி செய்திருப்பதும் கவனிக்கத் தக்கதா யிருக்க, நமது (ஸ்ரீரங்கம்) ரேஞ்சின் ஸெண்டர் சங்கங்களிலும், வேறு சில ரேஞ்சுகளிலும் நம்முடைய பரீக்ஷாதிகாரிகள், காலத்திற்கும்,—தங்களைப் போன்ற பரீக்ஷாதிகாரிகளின் செயல்கட்கும் முரணுப்க் காரியங்கள் நடத்துவதும் மெத்த விசனிக்கத் தக்கதே. ஏழை எலிமெண்டரி உபாத்திமார்களிடம் நியாயமில்லாத வழியில், வயிற்றுக் கொடுமைக்காகப் புலம்பும் விஷயத்தில், அடக்கு முறைகளை உபயோகித்தலும் காருண்யமாகுமோ?

P. பரிமணப்பல்லவராயர்,
ஹெட் மாஸ்டர், போர்டு ஸ்கூல், உத்தமசேரி,
திருவளர்சோலை போஸ்ட், திருச்சிஜில்லா.

CONVERSATION

சம்பாஷணை

இக்காலத்தில் எவ்விடத்திலும் மிகைப்படச் சொல்லுதலும் சம்பாஷணையும் அதிகரித் திருக்கின்றனவாதலால், இவ்விஷயத்தைப்பற்றி யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி சிறிது எழுதுகிறோம்:

உலகத்தில் சொற்கள் எவ்வளவு உபயோகமும் மேன்மையும் உடையனவோ, அதை முதலில் யாவரும் சற்று ஆலோசித்துப் பார்ப்போம். அவை நமது உள்ளத்திற்கு ஒருடைமையாகவும் அவரவரது குணகுணங்களை உள்ளபடி அறிவதற்கு ஒரு அறிகுறியாகவும் இருக்கின்றன. ஏறக்குறைய இவ்வுலகத்தில் இயற்றப்-

படுகிற எவ்வகை நன்மையுந் தீமையும் சொற்களாலேதான் இயற்றப்படுகின்றன. கடைசியில் அவரவர்களின் குண தோஷங்களைப் பிசகாமல் வெளிப்படுத்திச் சுகதுக்கங்களை விளைவிப்பனவும் சொற்கள்தாம். இப்படி ஒருவர்க்குச் சிறுமையும் பெருமையும் உண்டாக்குவதற்கு முதற் காரணமான சொற்கள் மனிதனுக்குக் கைவசமாயிருக்கின்றன. ஆயினும், ஒருவனுக்கு அறிவும் ஆஸ்தையும் எவ்வளவுண்டோ அவ்வளவுதான் அவன் சொற்களுக்குப் பெருமையுண்டாம். அறிவு ஆஸ்தை என்கிற இரண்டு திறமையும் ஒருவனிடத்தில் உண்டு இல்லையென்பதை அவன் சொற்களே காட்டிவிடும். ஆதலால், நாம் பேசும் போதெல்லாம் நமது சொற்கள் நம்மைக் காட்டிவிடும். ஆதலால் நாம் பேசும்போதெல்லாம் நமது சொற்கள் இனிமையும் கம்பீரமும் ஒழுங்கும் உடையனவாயிருக்க முயலவேண்டும். இக் கருத்துகொண்டே 'ஞயம்பட வுரை' என்றார் ஔவையாரும்.

இவ்வகைச் சொற்களால் ஒவ்வொரு காரியத்தைப்பற்றி ஒருவர்க்கொருவர் பேசுவது சம்பாஷணை என்னப்படும். அந்தச் சம்பாஷணை ஸாமானிய ஸம்பாஷணை, தர்க்கம், ஹிதஸம்பாஷணை, பிர்ம்மவிசாரம் என நான்குவிதமாம். அவற்றுள் பகவத்பக்தியுடையவர்கள் அல்லது ஞானிகள் செய்யும் சம்பாஷணையைப்பற்றியே முக்கியமாய்ப் பேசுகிறோம்.

ஸாமானிய ஸம்பாஷணை யாவது அவரவர்களின் மனோ விருத்தி வியவஹாரம் அதாவது வீட்டுச் சங்கதிகளைப்பற்றிப் பேசுவது, லவுகிகவியவஹாரம், கிரந்தவிசாரம், ராஜாங்க வியவஹாரம் முதலியனவாய்ப் பலவிதமாம். இந்த ஸம்பாஷணை, பக்தியுடையவர்களாகட்டும் இல்லாதவர்களாகட்டும், யாவரும் செய்து முடிக்கத்தக்கதுதான். அப்படி ஸம்பாஷணை செய்கிறகாலங்களில் எவ்வளவு அதிகமாய் யுக்தி புத்தி சாதுரியங்களைச் செலுத்தி ஆசையும் ஆவலுமாய்ப் பேசுகிறோமோ அவ்வளவாகப் பேரும் புகழும் அதிகமாகும்.

ஞானிகள் ஸம்பாஷணை செய்கிறகாலங்களில் அவர் மனத்தில் பகவத்பக்தி குடிகொண்டிருக்கும். ஸமயஸ்பூர்த்தியும் உற்சாகமும் தெய்வகடாக்ஷமும் அவர்களுக்கு அதிகம். இவையெல்லாம் மனத்தினுள்ளேயே அலைமோதி அமோகமாய்ப் பிரவகித்துக் கொண் டிருக்குமேயன்றி வெளியே தோன்று; அவர்களுக்கும்

தெரியாமல் ஒவ்வொரு சமயங்களில் வெளியேவந்து தோன்றுவது முண்டு. அதைக் கேட்க யாவர்க்கும் பரமானந்தமாயிருக்கும். ஸாமானிய ஸம்பாஷணைசெய்கிற காலங்களில் அவர்கள் ஆமுஷ்மிகஸம்பந்தமாய் எதையும் எடுத்து வெளியே பேசமாட்டார்கள். அந்த ஆனந்தமெல்லாம் உள்ளேயே அடங்கியிருக்கும்; ஆயினும் அடிக்கடி யுண்டாகிற சூசனைகளாலும் தாத்பரியங்களாலும் சப்தத் தொனியினாலும் அவர்கள் மகா யோகிகள் என்று ஒருவாறு அறிந்துகொள்ளலாம். ஆனால் ஒன்று உண்டு; பகவத்பக்தனாயிருப்பவன் ஒருவன் ஸம்பாஷணை செய்வனானால் எப்போதாவது ஒரு தருணத்தில் கடவுளுடைய குணாதிசயங்களைச் சிறிதளவாயினும் எடுத்துரையாமல் எழுந்துபோகான்.

இப்படிச் செய்யும் சம்பாஷணைகளில் நமது சொற்கள் இனிமையும் நயமும் சாதுரியமும் உடையவைகளாய்க் கேட்போர் காதுக்கு வெகு ரஞ்சகமாயிருப்பதைவிடப் பெருமை வேறொன்றுமில்லை. விகடகவி பேச்சுபோல் எல்லாம் சாதுரிய வார்த்தையாயிருப்பதும் ருசியாது. உப்பு எந்தப் பதார்த்தத்திற்கும் அதிக ருசியுண்டாக்குவதாயினும், அளவுக்கு ஒருதுளி அதிகமானாலும் விஷமாகுமல்லவா? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம். ஆதலால் காற்றிலடைந்த வாதனைபோலவும், பதார்த்தங்களிலுறைத்த உப்புரஸம்போலவும் சாதுரியம் சமத்காரம் முதலியவைகளும் சொற்களில் ஏற்றத்தாழ்ச்சியில்லாமல் மிதமாய் அமைந்திருக்கவேண்டும் இவையெல்லாம் மறைவாயிருந்து சம்பாஷணைக்குச் சிறப்புண்டாக்கவேண்டுமேயன்றி தமது ருசியையும் வெளியே காட்டுவது கூடாது.

தர்க்கமாவது ஒரு விஷயத்தைப்பற்றி முதலில் ஒருவர் பூர்வ பக்ஷம் பண்ணவும், அதன்மேலொருவர் ஸமாதானம் சொல்லவும், இவ்வாறு இரண்டுபேர் ஒரு விஷயத்தைக் குறித்துச் செய்யும் விசாரமாம். தர்க்கஞ்செய்யும் காலங்களில் வெகு கவனமாய் வாதிக்கவேண்டும். ஏனெனில் அது தன் நிலையில் நில்லாமல் தர்க்கம் வாக்குவாதமாகவும், வாக்குவாதம் சச்சரவாகவும், சச்சரவு பெருங்கோபமாகவும் முடிந்துபோம் ஆதலால் தர்க்கம் செம்மையாய் முடிந்து பயன்படுவது வெகு அருமை. தர்க்கம் செய்வது யாவர்க்கும் மிக்க உபயோகமானது. கவனமாய்ப் பாதுகாத்து ஒழுங்காக நடத்தினால் தர்க்கம் சீராகவே முடியும்.

ஒரு தடவை ஒரு கக்ஷி சலித்துத் தோல்வியடைந்தாலும், பிறகு நல்ல ஆலோசனையுண்டாகி அதனால் வெகு நன்மை விளையும். ஒவ்வொரு வேளைகளில், இனி நிலைநிற்காதென்று தள்ளிவிடும்படி எத்தனிக்கத்தக்க கக்ஷிகளைத் தாங்கும்படியான நியாயங்களும் தோன்றும். ஆதலால் தர்க்கஞ்செய்வதால் விசேஷமாய்ப் பேசுந் திறமையும் புத்திகூர்மையும் உண்டாகும்.

இவ்வகைத் தர்க்கத்திற்கு இன்றியமையாத சில ஒழுங்குகளுண்டு. அவையாவன:

தொடங்கிய விஷயத்தை விட்டு, விஷயத்தின்மேல் விஷயமாய்த் தர்க்கம்பண்ணுவது போலவே சாமானிய சம்பாஷணையிற் புகுந்து மெல்லமெல்ல நழுவ அநேகர் முயலுவார்கள். அப்படியில்லாமல், முதலிலேயே தன் வழியைவிட்டு ஒரு விரற்கடைகூட விலகாமலிருக்கும்படி நன்றாய் எல்லையேற்படுத்தி வேலிபோட்டுப் பக்கத்திலெங்குஞ் சாயாமல் நேராய்ப் போகவேண்டும்.

தகுந்த மத்தியஸ்தர்களோடுகூட ஸ்திர புத்தியும், நியாய சிந்தையும் இல்லாமல் அதற்குள் பிரவேசிக்கக்கூடாது.

நான் எனது என்கிற எண்ணத்தை வேரறுக்கவேண்டும். நாம் தொடங்கியதை விட்டுப் புதிதாய் ஒரு விஷயத்தையும் வாயெடுக்கக்கூடாது. மனிதர்களைப் பற்றி ஒன்றையும் பேசக்கூடாது. எல்லாம் வஸ்துக்களையும், விஷயங்களையும், தத்துவங்களையுமே பற்றினவையாயிருக்கவேண்டும். கூடியவரையில் நான் நீ என்கிற பேச்சு உண்டாகாமல் தடுக்கவேண்டும்.

தக்க தருணங்களில் முன்னோர் கொள்கைகளை எடுத்து உரைத்துத் திஷடாந்தப்படுத்தலாம். முதலில் தொடங்கிய விஷயமெதுவோ அதைச் சாதிக்கவேண்டிய நியாயங்களைத் தேடவேண்டுமேயன்றி, எப்படியாவது ஜயங் கிடைத்தாற் போதுமென்று வீண்வாதஞ் செய்வது கூடாது.

அடிக்கடி நமது கருத்துகள் மாறாமல் ஏகரீதியாயிருக்கின்றனவா இல்லையா என்று சோதனைசெய்து, குணங்களையும் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

உண்மை யாரிடத்தி லிருந்தாலும், எந்த விஷயத்திலிருந்தாலும் அதை அங்கீகரிக்கவேண்டும்.

நம்மால் கூடியவரையில் யாவர்க்கும் சம்மதமான விஷயங்களையே எடுத்துரைக்க முயலவேண்டும்.

நம்மிடத்திலுள்ள அமைதியடங்கிக் கோபமும் அகங்காரமும் மேலெழுவதாகத் தோன்றினல் உடனே வாதத்தை நிறுத்தவேண்டும்.

கடைசியில் ஏற்றவிதமாய் நியாயத்தை அங்கீகரித்து அடங்கவேண்டுமேயன்றி மனத்திற் கள்ளநினைவு கொள்ளலாகாது.

இவ்விதிகளுக்கு மாருமல் ஈசுவரபக்தியும் அசத்தியபயமுமுடையவர்களாய் தர்க்கஞ்செய்பவர்களுக்கு ஒருகாலுங் குறைவு நேராது; மேன்மேலும் சாமர்த்தியம் அதிகமாகும்.

ஹிதஸம்பாஷணையாவது ஒருவனுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டுமென்று கோரிச் செய்கிற சம்பாஷணையாம். ஹிதஸம்பாஷணைசெய்து சித்திபெறுவது மிகவும் அசாத்தியம். ஹிதஸம்பாஷணைசெய்து சித்திபெறவேண்டுமென்று கருதியவர்கள், தமது நற்போதனைகளும் சிக்ஷைகளும் இலகுவாகவே கேட்போர் கருத்திலேறும்படி, வெகு நயமகவே பேசுவார்கள். அவர்கள் எதையும் தருணம்பார்த்துத் தெரிவிப்பது வழக்கம். கேட்போருக்குத் தாங்கத்திறமை எவ்வளவோ அவ்வளவுதான் உண்மைகளையெடுத்து உரைப்பார்கள். இதத்தை உபதேசிக்கக் கருதியவர்கள் எவரிடத்திலும் கண்ணியமும் கவுரமுமாகவே பேசித் தமது கருத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். ஹிதஸம்பாஷணை செய்வதற்குத் தக்க முயற்சியில்லாவிடின் அதன் கருத்து ஈடேறுது. நாம் சாதாரணமாய் வீடுகளில் பேசுகிற பேச்சு அதிக சாதுரியமாயும் இனிமையாயு மிருப்பதில்லை. யாராவது புதிதாய் ஒருவரைக் கண்டால் வெகுரஸமாய்ப் பேசுகிறோம். இதற்குக் காரணம் நமது முயற்சியும் முயற்சியின்மையுமே யொழிய வேறென்ன? இவ்வாறு ஹிதஸம்பாஷணைசெய்து சித்திபெற்றவர்களை விசேஷமாய்க் காண்பது அரிது. அதன்வழி இப்படிப்பட்டதென்று யாவர்க்குந்தெரியும்படி அவற்றுள் இரண்டொரு உதாஹரணம் எடுத்துக்காட்டுகிறோம்:

முற்காலத்தில் பாடலிபுரத்தரசனுன சுதரிசனனுடைய பிள்ளைகள் சிறிதும் படியாமல் மூடர்களாய் ஒழுக்கம் ஆசாரம்

என்பவை ஒன்றுமில்லாமல் தான் தோன்றியாய் இருந்தார்களென்றும், அதைக் கண்டு அவ்வரசன் மிகவும் துக்கித்துப் புலம்புகையில், சோமசன்மா என்பவன் அப்பிள்ளைகளுக்குப் பற்பல விதமாய் இனியசொற்களாகவே இதோபதேசஞ்செய்து நன்னெறி பழக்கினனென்றும் பஞ்சதந்திரத்திற் படித்திருக்கிறோமே; அப்படிப்பட்டவைதாம் ஹிதஸம்பாஷணைகள். இப்படிச் சோமசன்மாசெய்த சம்பாஷணைபோன்ற ஹிதஸம்பாஷணைகளெல்லாம் ஹிதமான பயன்களைக் கருதிச் செய்யும் ஸம்பாஷணைகளாம். ஆமுஷ்மிக பலத்தைத் தருவதான ஆத்மஞானத்தைப் பற்றிச் செய்யும் சம்பாஷணைகளுக்கும் பல உதாஹரணமுண்டு.

வெகுகாலத்திற்குமுன்னே ருபு என்னும் மகரிஷியொருவர் இருந்தார். அவர் நிதாகர் என்பவரிடத்தில் பூர்ணகடாக்ஷம் வைத்து அடிக்கடி அவர்க்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டிருந்தார். ஒருகால் தன் சிஷ்யனுடைய மனத்தைப் பரிசோதிக்கவேண்டுமென்று ருபு நிதாகர் வீட்டிற்குப் போனார். அவர் தன் ஆசிரியர் என்று தெரியாமலே அவர்க்குச் சகல உபசாரமும் செய்தானபிறகு நிதாகர் ருபுவை நோக்கி, 'சுவாமி! இப்போது புசித்த போஜனத்தால் தங்களுக்குப் பசிதணிந்து திருப்தியுண்டாயிற்றா? தங்களிருப்பிடமெது? எங்கே எதற்காகப்போகிறீர்கள்?' என்று கேட்டதற்கு, ருபு, 'பசியுள்ளவனுக்கன்றோ போஜனத்தால் திருப்தியுண்டாகும்; தாகமுடையவனுக்கன்றோ தண்ணீரால் திருப்தியுண்டாகும்; ஆத்மாவுக்குப் பசிதாகங்களேது? பசிதாகங்களெல்லாம் சரீரகுணங்களல்லவோ? மேலும், எங்கிருந்து வருகிறாய் எங்கே போகிறாயென்று கேட்கிறீர்களோ? ஆகாயம்போல எங்கும் வியாபித்திருக்கும் ஆத்மாவுக்கு இருப்பிடமேது? போக்கிடமேது?' என்றிப்படிச் சிற்சிலவாய், அவர் கேள்விகளைக்கொண்டே அவர்க்கு ஞானத்தை உபதேசித்து அஞ்ஞானத்தை அகற்றினார். சிலகாலங்கழித்து முன் உபதேசித்த தத்துவத்தை நிதாகர் மறுபடியும் மறந்திருப்பதாகத் தெரிந்து ருபு திரும்பவும் அவரண்டை வந்து, 'நீங்களேன் தனித்து ஒரு புறமாயிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு நிதாகர் இதோ இந்த ராஜன் பரிஜனங்களோடுகூடப் பட்டணத்துட் பிரவேசிப்பதனால், கூட்டங் கலையட்டுமென்று நிற்கிறேன்' என்று சொன்னதைக் கேட்டு, ருபு, 'ராஜன் யார்? பரிஜனங்கள் யார்?' என்று

வினவ, 'அதோ யானைமேலிருப்பவன் ராஜா, மற்றவர்களெல்லாம் பரிஜனங்கள்' என்றார். மறுபடியும் ருபு, 'யானைமேலிருப்பவன் அரசனென்று பொதுப்படச் சொன்னீர்களே; யானை எதுவோ அரசனெவனோ தெரியவில்லையே' என, அதற்கு நிதாகர், 'மேலே ஏறியிருப்பவன் அரசன் கீழே அவனைத் தாங்கியிருப்பது யானை' யென்று சொன்னதைக் கேட்டு, 'இன்னுமெனக்கு வெளிப்படவில்லையே; மேலெது கீழெது?' என்றார். அப்போது நிதாகர் தான் அவர்மே லேறிக்கொண்டு, 'என்னைப் போல மேலேறியிருப்பவன் அரசன்; உம்மைப்போலக் கீழே தாங்குவது யானை' என்று சொல்ல, ருபு, 'அது சரிதான்; நீ என்றுமென்ன? நானென்றுமென்ன? அதை எனக்குத் தெளிவாய்த் தெரிவிக்க வேண்டும்' என்றார். உடனே ஞானோதயமாகி நிதாகர் அவர் தாள்களை வணங்கித் தத்துவங்களை யறிந்தார். இவ்வகையான சம்பாஷணைகள்தாம் ஹிதசம்பாஷணைகளாம்.

பிரம்மவிசாரமாவது ஆத்மநிஷ்டர்கள் இருவர்சேர்ந்து ஈசுவரதத்வத்தையறியும்படி ஒருவர்க்கொருவர் செய்யும் வேதாந்தவிசாரமாம். அதனால் உண்டாகும் ஆத்மாநந்தம் இருவர்க்கும் ஸமானமே. ஆத்ம விசாரம் பண்ணத்தக்க புண்ணிய புருஷர்கள் இக்காலத்தில் எங்கேயோ அருமையா யிருக்கிறார்கள். கடவுளையே முதன்மையாய் நம்பி, அந்தரபக்தியோடு ஒருவர்க்கொருவர் மனமொத்து ஆத்ம விசாரஞ் செய்வார்களாயின் அதைப் போல் அவ்வளவு பரமாநந்தத்தைத் தருவதும், பரலோக ஸாதனமும், பகவன் முகோல்லாஸமானதும் வேறொன்றுமில்லை. நாம் விசாரஞ் செய்கிற காலங்களில் உள்ளும், புறமும் ஏகரீதியாய் ஒத்து வாதிக்கவேண்டுமேயன்றி, மனத்திலொன்றும், வாயிலொன்றுமாய்ப் பேசுவது கூடாது. வீண் ஆடம்பரங்கள் அதிகமாயில்லாமல் லளிதமாகவே பேசவேண்டும்; தனக்குத் தத்துவங்கள் எவ்வளவு அதிகமாகத் தெரிந்திருந்தாலும் அடங்கி ஒடுங்கி ஸத்தியத்திற்குப் பயந்து திருத்தமாகவே பேசவேண்டும். நாம் எந்தக் காரியஞ் செய்தாலும் கடவுள் ஒருவரிருக்கிறாரென்று நம்பி அவர் திருவுள்ளத்திற்கு உவப்பாகச் செய்தால், நாம் தொடங்கும் எல்லாக் காரியமும் சித்தியாகி முடிவில் முத்தி பெறுவோமென்பதற்குச் சந்தேகமே யில்லை. பிரம்ம விசாரத்தைப் பற்றி விசதமாய் எழுதப் புகின் விரியுமாதலால் அதற்கு இங்கு இடமில்லை யென்று

இவ்வளவோடு ஒழிந்தோம். நாம் வீட்டிலாகட்டும், வெளியிலாகட்டும், ஏகாந்தமாய் ஒருவருடன் என்ன பேச்சு பேசினாலும், எந்தக் காரியஞ் செய்தாலும் மூன்றாவனொருவன் கண்காணித்துக்கொண்டிருக்கிறானென்று இருதயத்தில் உறுதியாய்க்கொண்டிருப்பவர்களுக்கு எக் காலத்திலும், எவ்விடத்திலும் எவ் வகையிலும் குறைவில்லை. அப்படிக் கண்காணித்து நம்மை ரக்ஷிக்க வல்லவனே கடவுள்.

ஜனவிநோதினி

PALLU ON TIRUNARAIYUR

திருநறையூர்ப் பள்ளுக்கும்மி

'பள்ளு' என்பது தமிழ்ப் பிரபந்தவகைகளில் ஒன்றெனப்பெறும். தமிழ் நாட்டில் பயிரிடுங் குடிகளாகிய பள்ளர் எனப்படுவார் செய்யும் பயிர்த்தொழில் விஷயமாகப் பாடப்பெறுவது இப்பள்ளென்பது. இதனுள் காற்று, மழை, வெள்ளம், பள்ளர், பள்ளத்திகள், உழும் எருதுகள், நிலவகை, நெல்வகை முதலிய விவரங்கள் கூறப்பெறும்.

ஏற்றம் இறைப்போர் முதலிய தொழிலாளர் தத்தம் தொழிற்கேற்ற பாடல்கள் பாடுதல்போல, பயிர்த்தொழிலாளராகிய பள்ளரும் தமது பயிர்த்தொழிலுக்குத் தக்க பாட்டைப் பாடுவர். இச்செய்கை இக்காலத்தும் பலவிடங்களில் காணப்படுகின்றது.

ஈண்டு மேலே குறித்த பள்ளு திருநறையூர் விஷயமாகப் பாடப்பெற்றது. திருநறையூர் என்பது கும்பகோணத்துக்குக் கிழக்கில் ஆறுமைல் தூரத்தில் உள்ள ஒரு விசேஷஸ்தலம். அது நாய்ச்சியார் கோயில் என வழங்கப் பெறுகின்றது. இப்பள்ளு, பெண்கள் குதித்துப்பாடுதற்கு ஏற்கும்படி கும்மிப்பாடலாகப் பாடப்பெற்றது.

காப்பு.

சங்கராபரணம்—ஆதிதாளம்

உலகமெங்கும் நிறைந்தவன்
ஒளிவிசும்பினி லுறைந்தவன்
அலைகடற்பள்ளி கொண்டவன்
அகிலவுலகு முண்டவன்
மலரிலயனைத் தந்தவனிந்த
மலைச்சுகந்தத்தில் வந்தவன்
திலதமாஞ்சீனி வாசன்வஞ்சுளை
செந்தமிழ்ப் பள்ளுப் பாடவே.

விளங்குஞ் சுகந்த வனத்தினில்
மேதாவிரிஷி மனத்தினில்
வளம்பெறவர மளித்தவன்
வஞ்சுளையைக் கண்டு களித்தவன்
துளங்க அரவில் நடித்தவன்
துஷ்ட வரக்கரை முடித்தவன்
இலங்குஞ் சீனிவாஸன் வஞ்சுளை
இன்றமிழ்ப் பள்ளுப் பாடவே.

பொய்கைமுத லாழ்வா ரவர்களும்
புகழ்சே ரரிய தவர்களும்
வையம்புக ழெதி ராயரும்
மணவாள முனித் தூயரும்
செய்யவஞ் சுளத்தாய் சீனிவாஸன்
திருப்புகழ்ப் பள்ளுப் பாடநேசம்
வையகுரு வனந்தாண் பிள்ளையிவர்
மலர்ப்பதம் மிகக் காக்கவே.

(இன்னும் வரும்)

K. S. GOPALACHARIAR.

READY FOR SALE! **JUST OUT!**

The First Book in the Field

Vernacular Atlas Geography Series - Book I

MADRAS PRESIDENCY

படங்களை ஒட்டின பூகோள சாஸ்திரம்

முதற் புத்தகம்

சென்னை ராஜதானி

BY

K. DORAISAWMI IYENGAR

WITH AN INTRODUCTION

By H. A. HART, M.A., L.T.

PRICE ANNAS 8.

The Heroines Of Ind

இந்து ஸ்திரீ ரத்னங்கள்

இதில் சித்திரப் படங்களுடன் 10-இந்திய ஸ்திரீகளின் சரித்திரங்க ளடங்கியுள்ளன.

PART I

BY

C. S. RAMASAWMY AYYAR.

Price As. 8.

Apply to — ***C. Coomarasawmy Naidu & Sons,***

35, Chinnatambi Street, Madras.

QUEEN MARY READERS

மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

இப்பெயர்கொண்ட புஸ்தகங்கள் ஒன்றுமுதல் ஐந்துவரை வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் பெண்களுக்காகவே ஏற்ற முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. நம் இந்திய குடும்பத்துக்கு அவசியமாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்கள் எளிதாகத் தெரியும்படி கூறப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இனிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நம் இந்திய பெண்கள் இப்புஸ்தகங்களை வாசிப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை. குழந்தைகளைத் தாலாட்டல், விளையாட்டுக் காட்டல், நலங்கிடும் பாடல் முதலியவை பெரிதும் அழகுடன் விளங்குகின்றன. இவ்வாறு பெண்களுக்கெனத் தனியாக முதல் முதல் வெளிவந்த புஸ்தகங்கள் இவைகளே. உபாத்திமார்கள் யாவரும் வாங்கிப்பார்த்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்துப் பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

விலை—I - 2 அ., II - 2 அ. 6 பை., III - 3 அ., IV - 4 அ., V - 5 அ.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

ஆரியமத - - - - - - - உபாக்கியானம்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

முதல் பாகம் விலை அணா 8 இரண்டாம் பாகம் விலை அணா 10

ஒவ்வொரு பாகமும் நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 சிறந்த நீதிக்கதைகள் கொண்டது. ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை நன்கு போதிக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் 14 அழகிய ஆப்டோன் படங்கள் அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர் எமது ஆபீசுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
35, சின்னதம்பி தெரு, சென்னை.